

# தோ பாயோ மரபுடைமைப் பாதை

வரைபடமும் பரிந்துரைக்கப்படும் பயணப்பாதைகளும்

தோ பாயோ மரபுடைமைப் பாதை, சிங்கப்பூரிலுள்ள இடங்களின் வரலாற்றை, சமூக நினைவலைகளை ஆவணப்படுத்திப் படைக்கும் நோக்கத்துடன் தேசிய மரபுடைமைக் கழகம் தொடர்ந்து மேற்கொண்டுவரும் முயற்சியின் ஒரு பகுதியாகும். இவ்வட்டாரத்தில் வேலை செய்தவர்கள், வாழ்ந்தவர்கள், அல்லது விளையாடியவர்களுக்கு இனிமையான அக்கால நினைவுகளை இப்பாதை ஞாபகப்படுத்தும் என்றும், வருகையாளர்களுக்கும் புதிய குடியிருப்பாளர்களுக்கும் பயனளிக்கும் தகவல் வளமாகப் பயன்படும் என்றும் நம்புகிறோம்.

ஆதரவாளர்கள்

National Heritage Board

MCCY Ministry of Culture, Community and Youth



கட்டுமானத்தில் உள்ள தோ பாயோ நகரம், 1967
வீடமைப்பு வளர்ச்சிக் கழகத்திற்கு நன்றி

# பரிந்துரைக்கப்படும் குறுந்தூரப் பயணப்பாதைகள்

தனித்துவமிக்க வீடமைப்பு வளர்ச்சிக் கழக (வீவக) அடுக்குமாடிக் கட்டடங்கள், வழிபாட்டுத் தலங்கள், பொது வசதிகள் எனப் பலவும் உள்ளடங்கிய இம்மூன்று பாதைகளும், தோ பாயோவில் பொதுக் குடியிருப்புகளின் வடிவமைப்பில் ஏற்பட்டுள்ள உருமாற்றத்தையும், சமய, சமூக அமைப்புகளின் வரலாற்றையும் காட்டுகின்றன. இன்றே ஒரு பயணப்பாதையைத் தேர்ந்தெடுத்து, தோ பாயோவில் உள்ள மரபுடைமைக் கட்டடங்கள், தளங்கள், கட்டமைப்புகள் அனைத்தையும் ஆராயுங்கள்!

## பொதுக் குடியிருப்புகளும் பகிரப்படும் இடங்களும்

(நடந்து சென்றால் 1.5 மணிநேரம், 4.5 கிலோமீட்டர்)

வீடமைப்பு வளர்ச்சிக் கழகமே (வீவக) முழுவதும் திட்டமிட்டுக் கட்டிய முதல் நகரமான தோ பாயோ, சிங்கப்பூரிலுள்ள பொதுக் குடியிருப்புகளின் உருமாற்றத்தை வெளிப்படுத்தும் ஆகச்சிறந்த உதாரணமாகத் திகழ்கிறது. வீவக அடுக்குமாடிக் கட்டடங்கள், சமூக இடப்பரப்புகள், நகரத் திட்ட அமைப்பு ஆகியவற்றின் வடிவமைப்பில் ஏற்பட்டுள்ள மேம்பாடுகளை இந்தப் பாதை ஆராய்கிறது. கடந்துசென்ற ஆண்டுகளில், சிங்கப்பூர் வீட்டுரிமையாளர்களின் தேவைகளிலும் விருப்பங்களிலும் ஏற்பட்ட மாற்றங்களை அவை பிரதிபலிக்கின்றன.





உங்கள் பயணத்தை லோரோங் 5ல் உள்ள புளோக் 53, 'விஐபி புளோக்கில்' தொடங்குங்கள். புளோக் 53, அதனைச் சுற்றியுள்ள மற்ற கட்டடங்கள் ஆகியவை தோ பாயோ நகரில் கட்டப்பட்ட முதல் கட்டடங்களில் உள்ளடங்கும். இந்த 19 மாடிக் கட்டடம் 1967ல் கட்டப்பட்டது. கட்டடத்தின் "Y" வடிவமைப்பு, கூரையில் உள்ள பெரிய உருளைவடிவத் தண்ணீர் கோபுரமும் இதன் தனித்துவங்கள். 1960களிலும் 1970களிலும் பிரமுகர்கள், அதிபர்கள், அரசர்கள் பலரும் இந்தக் கட்டடத்திற்கு வருகையளித்ததால், பிற்பாடு இது 'விஐபி புளோக்' எனப் பெயர்பெற்றது.

அடுத்து, தோ பாயோ நகரப் பூங்காவை அடைய லோரோங் 1ல் இருந்து லோரோங் 6க்கு நடந்து செல்லுங்கள். அங்கு, நகரச் சீரமைப்பு ஆணையம் பாதுகாத்து வைத்திருக்கும் 25 மீட்டர் உயரமான காட்சிக் கோபுரம் உள்ளது. 1970களில் நிறைவடைந்த இந்தப் பூங்கா மிகவும் பிரபலமடைந்ததால், அடுத்தடுத்துக் கட்டப்பட்ட ஒவ்வொரு பொதுக் குடியிருப்பு நகரிலும் பூங்காக்களுக்கென கணிசமான நிலப்பகுதியை வீவக ஒதுக்கியது. இப்பூங்காவின் கண்கவர் ஏரி, பாலங்கள், பசுமைத் தாவரங்கள் ஆகியவை 1970களிலும் 1980களிலும் திருமணப் புகைப்படங்களின் பின்னணிச் சூழலாக அடிக்கடி பயன்படுத்தப்பட்டன.

லோரோங் 6ன் குறுக்கே கடந்து, வீவக மையத்தின் வழியாக தோ பாயோ சென்ட்ரலை நோக்கி நடந்து செல்லுங்கள். அங்கிருந்து சென்ட்ரல் ஹொரைசனின் (புளோக் 79A முதல் 79E வரை) கம்பீரமான தோற்றத்தை வடக்கு திசையில் காணுங்கள். ஒவ்வொரு கட்டடத்திலும் இருக்கும் தங்க 'மகுடங்களின்' மூலம் அந்தக் கட்டடங்களை அடையாளம் கண்டுகொள்ளலாம். 1960களில் கட்டப்பட்ட 10 மாடி உயரமான புளோக் 79, அந்தக் காலகட்டத்தில் சிங்கப்பூரின் ஆக நீளமான குடியிருப்புக் கட்டடங்களில் ஒன்றாகத் திகழ்ந்தது. அதன் நீளம் 296 மீட்டர். பின்னர், ஒட்டுமொத்த மறுமேம்பாட்டுத் திட்டத்தின் ஒரு பகுதியாக 2003ல் புளோக் 79 இடித்துக் கட்டப்பட்டது. புதிய குடியிருப்புத் தேவைகளைக் கருத்தில் கொண்டு ஏறத்தாழ 40 மாடி உயரமான ஐந்து கட்டடங்களுடன் கட்டப்பட்ட புதிய குடியிருப்பு விருது பெற்றுள்ளது.





லோரோங் 4 வழியாக, வடக்கு நோக்கி லோரோங் 1க்குச் சென்று, அங்கிருந்து மேற்கு நோக்கி புளோக் 116க்குச் செல்லுங்கள். வழியில், லோரோங் 1 சாலையின் மறுபக்கத்தில் 1985ஆம் ஆண்டு கட்டப்பட்ட கலப்பாக விளையாட்டுத் திடலைக் காணத் தவறாதீர்கள். பெரும்பாலான கட்டடங்கள் நீள்வடிவில் கட்டப்பட்ட 1960களின் முற்பகுதியில், புளோக் 116 வழக்கத்திற்கு மாறான வளைவான வடிவில் கட்டப்பட்டது. புளோக் 53, புளோக் 116 இரண்டிலும் நீட்டிக்கப்பட்ட நடைபாதைகளும் உள்ளன. ஆரம்பகால வீவக வடிவமைப்புகளில் இடம்பெற்றிருந்த இந்த அம்சத்தை இப்போது காண்பது அரிது.

நகர மையத்தில், 1973 தென்கிழக்கு ஆசிய தீபகற்ப (SEAP) விளையாட்டுப் போட்டியின் முன்னாள் தங்குமிடமாக விளங்கிய, முக்கியமான அடையாளங்களாகத் திகழும் நான்கு பாயிண்ட் புளோக்குகளைக் காணுங்கள் (புளோக் 175, 179, 191, 193). எக்சிகியூட்டிவ் அடுக்குமாடி வீடுகளும் மேசனட் வீடுகளும் கட்டப்படுவதற்குமுன், பாயிண்ட் புளோக்குகளிலிருந்த வீவக வீடுகளே ஆக அதிகமாக விரும்பப்பட்டன. அவற்றின் அளவும் அந்தஸ்தும்தான் இதற்குக் காரணம். 1973 SEAP விளையாட்டுப் போட்டியின்போது, பங்கேற்பாளர்கள் இந்தக் கட்டடங்களில் தங்க வைக்கப்பட்டனர். பின்னர், முழுமையான அறைகலன்களோடு பொதுமக்களிடம் இவ்வீடுகள் விற்கப்பட்டன.



புளோக் 116ஐச் சுற்றிப்பார்த்த பிறகு, லோரோங் 1 வழியாக த பீக் @ தோ பாயோ (புளோக் 138 முதல் 139B வரை) குடியிருப்பை நோக்கித் தொடர்ந்து செல்லுங்கள். வீவக 2012ல் கட்டிமுடித்த மறுமேம்பாட்டுக் குடியிருப்பான இங்கு, கூரைத் தோட்டங்கள், நடுமாடியில் சமூக இடப்பரப்புகள் போன்றவை உள்ளன. லோரோங் 1 வழியாகத் தொடர்ந்து சென்று, லோரோங் 1, லோரோங் 2 சந்திப்பில் அமைந்துள்ள புளோக் 157ஐ எட்டுங்கள். 1960களில் கட்டப்பட்ட வளைவான புளோக் 157, சிங்கப்பூரிலுள்ள ஆக நீளமான அரைவட்டக் கட்டடங்களில் ஒன்றாகத் திகழ்கிறது.

இறுதியாக, லோரோங் 5 மற்றும் தோ பாயோ ஈஸ்ட் வழியாகக் கிழக்கு நோக்கிச் சென்று, புளோக் 29 வாகன நிறுத்துமிடத்தின் வழியாகத் தெற்குத் திசையில் சென்று, தோ பாயோ கடல்நாக விளையாட்டுத் திடலை அடையுங்கள். வீவக வடிவமைத்துக் கட்டிய இந்த விளையாட்டுத் திடலின் அடுக்குகள் பதித்த தலையையும், வளையங்களாலான உடற்பகுதியையும் கொண்ட கடல்நாக வடிவமும், சிங்கப்பூர் கலாசாரத்தின் பிரபலமான அடையாளச் சின்னங்களில் ஒன்றாக உருவாகியுள்ளது.



## மத விசுவாசங்களும் நம்பிக்கைகளும்

(பொதுப் போக்குவரத்தில் 2 மணிநேரம், 6 கிலோமீட்டர்)

தோ பாயோ ஒரு கிராமமாக இருந்த அந்நாளிலிருந்து இந்நாள் வரை, சமய அமைப்புகள் அங்கு நிலைத்திருக்கின்றன. தோ பாயோவில் வாழ்ந்த, வேலை செய்த, வழிபட்ட சமூகங்களைப் பிரதிநிதிக்கும் கோயில்கள், பள்ளிவாசல்கள், தேவாலயங்கள், அமைப்புகள் ஆகியவற்றுக்கு இந்தப் பாதை உங்களை அழைத்துச் செல்லும்.



உங்கள் பயணத்தை லியன் ஷான் ஷுவாங் லின் மடாலயத்தில் தொடங்குங்கள். இதுதான் சிங்கப்பூரிலுள்ள ஆகப் பழமையான பௌத்த மடாலயம். 1909ல் கட்டி முடிக்கப்பட்ட இந்த மடாலயத்தில் தேவலோக மன்னர்களின் மண்டபமும் மகாவீரர் மண்டபமும் அமைந்துள்ளன. அவை 1980ல் தேசிய நினைவுச்சின்னங்களாக அறிவிக்கப்பட்டன. மடாலயத்தின் வளாகத்தில் ஷுவாங் லின் செங் ஹுவாங் கோயிலும் அமைந்துள்ளது. இந்தத் தாவோயிசக் கோயிலை மடாலயத்தின் பௌத்த துறவிகள் நிர்வகிக்கின்றனர்.





வடிவமைப்புக்கே உரிய வடிவியல் சின்னங்களையும் மலர்வடிவங்களையும் காணலாம். இன்று, சிங்கப்பூர் இஸ்லாமிய சமய மன்றத்தின் தலைமையகமும் மதராசா இர்ஸ்யத் சுஹ்ரி அல்-இஸ்லாமியா பள்ளியும் பள்ளிவாசல் வளாகத்தில் அமைந்துள்ளன.

மடாலயத்தைப் பார்வையிட்ட பிறகு, வடக்கே லோரோங் 8ஐ நோக்கி நடந்து ஸ்ரீ வைராவிமட காளியம்மன் கோயிலுக்குச் செல்லுங்கள். ஆரம்பத்தில் ஆர்ச்சர்ட் சாலையில் அமைந்திருந்த இந்த இந்துக் கோயில், 1982ல் தோ பாயோவுக்கு இடம்பெயர்ந்தது. கோயிலின் மூலஸ்தானக் கடவுளான காளியின் சிலை, கம்பீரமான கோபுரத்தில் மையமாக வீற்றுள்ளது.

மஸ்ஜித் முஹாஜிரின் பள்ளிவாசலிலிருந்து, பிராடல் சாலையின் மறுபக்கத்திற்குச் சென்று பேருந்தில் ஏறி, அல்லது லோரோங் 6, லோரோங் 4 வழியாகத் தெற்குத் திசையில் நடந்து உயிர்த்த கிறிஸ்துவின் தேவாலயத்திற்குச் செல்லுங்கள். இந்தக் கத்தோலிக்க தேவாலயம் 1971ல் அமைக்கப்பட்டது. இங்கு பாரம்பரியமாக ஆங்கிலம், மாண்டரின், தமிழ் மொழிகளில் பிரார்த்தனைகள் நடத்தப்படுகின்றன. அண்மைக் காலமாக, மியன்மார், இந்தோனீசியா, பிலிப்பீன்ஸ் நாடுகளைச் சேர்ந்த திருச்சபையினரும் தேவாலயத்துக்கு வருகின்றனர்.

லோரோங் 7 வழியாக வடக்கே லோரோங் 8A நோக்கிச் சென்று, தோ பாயோவின் ஐந்து ஐக்கியக் கோயில்களைப் பாருங்கள். 1974ல் கட்டி முடிக்கப்பட்ட இந்த தாவோயிசக் கோயிலில், தோ பாயோ ஒரு கிராமமாக இருந்தபோது தொடங்கப்பட்ட ஐந்து கோயில்கள் அமைந்துள்ளன. வெவ்வேறு சீனக் கிளை மொழிகளைப் பேசுவோரின் கோயில்களை ஒரே இடத்திற்குக் கொண்டுவந்து, வெவ்வேறுபட்ட தெய்வங்களையும் ஓரிடத்தில் நிறுவிய முதல் சிங்கப்பூர்க் கோயில் இது.





பிறகு தோ பாயோ சென்ட்ரல் வழியாக மேற்கு நோக்கி தோ பாயோ மெத்தடிஸ்ட் தேவாலயத்திற்குச் செல்லுங்கள். 1960களின் பிற்பகுதியில் சில கிறிஸ்துவர்கள் ஒன்றுசேர்ந்து அமைத்த இலவச மருந்தகம், பாலர் பள்ளி ஆகியவற்றிலிருந்து இந்தத் தேவாலயம் உருவெடுத்தது. மெத்தடிஸ்ட் சமூகம் திரட்டிய நிதியுடன் 1973ல் தேவாலயக் கட்டடம் கட்டப்பட்டது.

இங்கிருந்து லோரோங் 6 வழியாக மேற்கு நோக்கி தோ பாயோ சியூ டெக் சியன் டொங் கோயிலுக்குச் செல்லுங்கள். இந்தக் கோயிலில் வீற்றிருக்கும் மூலஸ்தானக் கடவுள் சொங் டா ஃபெங். இக்கோயில் 1942ல் தொடங்கப்பட்டதிலிருந்து தாவோயிச, பௌத்த, கன்ஃபூசியப் பாரம்பரியங்கள் இங்கு நடைமுறையில் உள்ளன. மூதாதையரின் நினைவுப்பலகைகளை வைப்பதற்கான வசதியும் இங்கு உள்ளது. அதோடு, இன, சமய பாகுபாடின்றி எல்லோருக்கும் இலவச மருத்துவப் பராமரிப்புச் சேவை வழங்கும் பாரம்பரியச் சீன மருந்தகமும் கோயிலில் அமைந்துள்ளது.



அடுத்ததாக, பிராடல் சாலையில் உள்ள மஸ்ஜித் முஹாஜிரின் பள்ளிவாசலை நோக்கி லோரோங் 6 வழியாக நடந்து செல்லுங்கள். 1977ல் திறக்கப்பட்ட இந்தப் பள்ளிவாசல், சிங்கப்பூர் முழுவதும் வேலை செய்யும் முஸ்லிம்கள் பங்களிக்கும் பள்ளிவாசல் கட்டட நிதியின் ஆதரவோடும், சமூகத்தின் ஆதரவோடும் கட்டப்பட்ட முதல் பள்ளிவாசல் ஆகும். கட்டடத்தின் வெளிச்சுவர் பதிப்புகளிலும் தடுப்புகளிலும் இஸ்லாமிய

இறுதியாக, லோரோங் 2ன் குறுக்கே கடந்து, கிழக்கு நோக்கி நகர மையத்திலுள்ள புளோக் 177 மரச் சன்னதிக்குச் செல்லுங்கள். இது சீ என் கி என்றும் அழைக்கப்படுகிறது. தோ பாயோ ஒரு கிராமமாக இருந்த காலத்திலிருந்தே, சன்னதி அமைந்துள்ள ஆலமரம் புனிதத் தலமாகக் கருதப்பட்டு வருகிறது. இன்று, இந்தச் சன்னதியில் தாவோயிசக் கடவுள்களான டியன் கொங், குவான் யின், டத்தோ கொங், துவா பெக் கொங் ஆகியோர் வீற்றுள்ளனர்.

## சமூக அமைப்புகளும் பொது இடங்களும்

(நடந்து சென்றால் அரை மணிநேரம், 1.5 கிலோமீட்டர்)

கடந்த பல ஆண்டுகளாக, தோ பாயோவில் வசித்தவர்கள், இங்கு வந்தவர்கள் அனைவரின் நினைவிலும் சமூக அமைப்புகளும் பொது இடங்களும் நீங்கா இடம்பிடித்துள்ளன. குடியிருப்பாளர்கள், சிங்கப்பூரர்கள் அனைவரது விளையாட்டு, கலாசார, சமூக வாழ்க்கைகளில் இன்று வரை முக்கியப் பங்கு வகிக்கும் அமைப்புகளுக்கும் இடங்களுக்கும் இந்தப் பாதை உங்களைக் கொண்டு செல்லும்.



உங்கள் பயணத்தை தோ பாயோ விளையாட்டு வளாகத்தில் தொடங்குங்கள். தோ பாயோ விளையாட்டரங்கம், விளையாட்டு மண்டபம், விளையாட்டு நிலையம், நீச்சல் குளம் ஆகியவை இந்த வளாகத்தில் உள்ளன. 1973 தென்கிழக்கு ஆசிய தீபகற்ப (SEAP) விளையாட்டுப் போட்டிகளுக்காக இந்த வளாகம் கட்டப்பட்டது. கடந்த பல ஆண்டுகளாக, தேசிய பள்ளிகளுக்கிடையிலான நீச்சல் போட்டிகள் போன்ற போட்டிகளுக்கும் சமூக நடவடிக்கைகளுக்கும் விளையாட்டாளர்கள் இந்த வசதிகளை நன்கு பயன்படுத்தி வந்துள்ளனர்.

இந்தக் கட்டடங்களுக்கு அருகில் திரையரங்குகள், உணவங்காடி நிலையங்கள் போன்ற அன்றாட வசதிகள் அமைந்திருந்ததால், சிங்கப்பூர் வாழ்க்கையை விளையாட்டாளர்கள் அனுபவிக்க வாய்ப்புக் கிடைத்தது. இன்று, இந்தக் கட்டடத்தின் கீழ்த்தளம் செக்கர்ஸ் ("டம்" என்றும் அறியப்படும்) விளையாட்டுக்குப் பெயர்பெற்று விளங்குகிறது. ஆர்வமுள்ள விளையாட்டாளர்களும் பார்வையாளர்களும் இங்கு அடிக்கடி கூடுகின்றனர்.





லோரோங் 4ல் வடக்கு நோக்கி ச்சுங் ஹுவா மருத்துவ நிலையத்திற்குச் செல்லுங்கள். இந்நிலையம், 1978ல் தோ பாயோவில் திறக்கப்பட்டது. அதற்குமுன் 1952ல் ச்சுங் ஷான் சங்கத்தில் இலவசப் பாரம்பரிய சீன மருந்தகமாக இது தொடங்கப்பட்டது. தற்போதைய கட்டடத்தைக் கட்டுவதற்கு அனைத்து பின்னணிகளைச் சேர்ந்தவர்களும் நிதி வழங்கினர். பின்னர், இந்த மருந்தகம் விரிவடைந்து பல்வேறு சீன மருத்துவத் துறைகளில் ஆய்வு மேம்பாடுகள் செய்யத் தொடங்கியது. இன்றுவரை அனைத்துப் பின்னணிகளைச் சேர்ந்த நோயாளிகளுக்கும் குறைவான செலவில் சிகிச்சைகள் வழங்கி வருகிறது.

நகர மையத்தில் நடையர் சதுக்கத்தின் வழியாக மேற்கு நோக்கி சிறிதுதூரம் நடந்து, புளோக் 177 மரச் சன்னதிக்குச் செல்லுங்கள். இது சீ என் கி என்றும் அழைக்கப்படும். தோ பாயோ ஒரு கிராமமாக இருந்த காலத்திலிருந்து புனிதமாகக் கருதப்படும் ஆலமரத்தின் அடியில் இந்தச் சன்னதியைப் பக்தர்கள் கட்டினர். பரபரப்பான தோ பாயோ சென்ட்ரலின் மையத்தில் அமைந்துள்ள இந்தச் சன்னதியைத் தேடி, தோ பாயோவுக்கு வெளியே உள்ளவர்களும் வருகின்றனர்.






அடுத்ததாக, லோரோங் 4 வழியாகச் சென்று, தோ பாயோ சென்ட்ரலில் மேற்கு நோக்கிச் சென்று புளோக் 179க்குச் செல்லுங்கள். அதுதான் முன்னாள் 1973 SEAP விளையாட்டுப் போட்டிக்கான தங்குமிடமாக இருந்தது. விளையாட்டுப் போட்டியின்போது விளையாட்டாளர்கள் தங்கியிருந்த நான்கு பாயிண்ட் புளோக்குகளில் இதுவும் ஒன்று.

முடிவில், லோரோங் 2ல் வடக்கு திசை நோக்கி சிங்கப்பூர் சீனக் குலமரபுச் சங்கங்கள் கூட்டமைப்புக்குச் செல்லுங்கள். ஏழு குலமரபுச் சங்கங்கள் அமைத்த இந்தக் கூட்டமைப்பு, 1986ல் முறைப்படி தொடங்கப்பட்டது. கூட்டமைப்பின் தலைமையகம் 1997ல் தோ பாயோவுக்கு மாறிச் சென்றது. இந்தக் கூட்டமைப்பு, பல்வேறு நிகழ்ச்சிகள், கண்காட்சிகள் மற்றும் வெளியீடுகள் மூலம் சிங்கப்பூர் சீனக் கலாசாரத்தை வளர்க்கிறது. அதோடு, வசதி குறைவான மாணவர்களுக்கும் கைதிகளுக்கும் உபகாரச் சம்பளங்களும் கல்வி உதவி நிதிகளும் வழங்குகிறது. கூட்டமைப்பின் கட்டடத்தில் மரபுடைமைக் காட்சிக்கூடமும் அமைந்துள்ளது. சீன சமூகத்திலுள்ள பல்வேறு பிரிவுகளின் வரலாற்றையும், உள்ளூர் சீன விழாக்கள், கலாசாரப் பழக்கங்கள் பற்றிய விவரங்களையும் வருகையாளர்கள் காட்சிக்கூடத்தில் ஆராயலாம்.




# HERITAGE SITES IN THE SUGGESTED SHORT TRAIL ROUTES



BLOCK 53, THE "VIP BLOCK" · CHUNG HWA MEDICAL INSTITUTION · CHURCH OF THE RISEN CHRIST · FORMER 1973 SEAP GAMES VILLAGE · LIAN SHAN SHUANG LIN MONASTERY · MASJID MUHAJIRIN · SINGAPORE FEDERATION OF CHINESE CLAN ASSOCIATIONS · SRI VAIRAVIMADA KALIAMMAN TEMPLE · TOA PAYOH DRAGON PLAYGROUND · TOA PAYOH METHODIST CHURCH · TOA PAYOH SEU TECK SEAN TONG · TOA PAYOH SPORTS COMPLEX · TOA PAYOH TOWN PARK · TREE SHRINE AT BLOCK 177 · UNITED FIVE TEMPLES OF TOA PAYOH

All information contained in this trail map is provided in good faith, and every reasonable effort has been made to ensure that the information is accurate and up to date at time of print. Accordingly, NHB makes no warranty or representation relating to the trail map and all information contained therein, and users relying on any of the information contained in the trail map shall do so at their own risk and diligence.

©2023 National Heritage Board.
All rights reserved.

Scan here to learn more on Roots.gov.sg